جمعية الدعوة والإرشاد
وتوعية الجاليات بالخبر

# எதிரிகளின் தீங்குகளிலிருந்து பாதுகாப்பு பெற ஓத வேண்டிய துஆக்கள்

அல்கோபார் அழைப்பகம், தமிழ்ப் பிரிவு

# எதிரிகளின் தீங்குகளிலிருந்து பாதுகாப்பு பெற ஓத வேண்டிய துஆக்கள்

1

## எதிரிகளைத் தோல்வியடையச் செய்ய கேட்க வேண்டிய பிரார்த்தனைகள்

اَللّٰهُمَّ مُنْزِلَ الْكِتَابِ وَمُجْرِيَ السَّحَابِ وَهَازِمَ الأَحْزَابِ اهْزِمْهُمْ وَانْصُرْنَا عَلَيْهِمْ

அல்லாஹும்ம முன்ஸி(ز)லல் கிதாபி வமுஜ்ரியஸ் ஸஹாபி வஹாஸி(ز)மல் அஹ்ஸா(ز)பி, இஹ்ஸி(ز)ம்ஹும் வன்ஸு(ص)ர்னா அலைஹிம்

“இறைவா! வேதத்தை அருள்பவனே! மேகத்தை நகர்த்திச் செல்பவனே! கூட்டுப் படைகளைத் தோற்கடித்தவனே! இவர்களையும் தோற்கடித்து, இவர்களுக்கெதிராக எங்களுக்கு உதவுவாயாக!”

அறிவிப்பவர்: அப்துல்லாஹ் இப்னு அபீ அவ்ஃபா(ரலி), புஹாரி 3025

## எதிரிகளின் தீங்குகளிலிருந்து பாதுகாப்பு பெற ஓத வேண்டிய துஆக்கள்

**2**

### எதிரிகளைத் தோல்வியடையச் செய்ய கேட்க வேண்டிய பிரார்த்தனைகள்

اَللّٰهُمَّ مُنْزِلَ الْكِتَابِ، سَرِيعَ الْحِسَابِ، اَللّٰهُمَّ اهْزِمِ الْأَحْزَابَ، اَللّٰهُمَّ اهْزِمْهُمْ وَزَلْزِلْهُمْ

அல்லாஹும்ம முன்ஸி(ز)லல் கிதாபி ஸரீஅல் ஹிஸாபி அல்லாஹும்மஹ்ஸி(ز)பில் அஹ்ஸாப அல்லாஹும்மஹ்ஸி(ز)ம்ஹும் வஸல்ஸி(ز)ல்ஹும்

"இறைவா! குர்ஆனை அருள்பவனே! விரைவாகக் கணக்கெடுப்பவனே! இறைவா! இக்கூட்டுப் படையினரைத் தோற்கடிப்பாயாக! இறைவா! இவர்களைத் தோல்வியுறச்செய்து நடுக்கத்திற்குள்ளாக்குவாயாக!"

அறிவிப்பவர்: அப்துல்லாஹ் இப்னு அபீ அவ்ஃபா(ரலி) அவர்கள், புஹாரி 2933

## எதிரிகளின் தீங்குகளிலிருந்து பாதுகாப்பு பெற ஓத வேண்டிய துஆக்கள்

3

### ஒரு கூட்டதாதாரைப் பயந்தவர் கூற வேண்டியது

اَللّٰهُمَّ اكْفِنِيهِمْ بِمَا شِئْتَ

அல்லாஹுமக்பி(ف)னீஹிம் பிமா ஷி(ش)ஃத

யா அல்லாஹ்! நீ நாடியதைக் கொண்டு அவர்களுக்கெதிராக எனக்குப் போதுமானவனாக இருப்பாயாக!

அறிவிப்பவர்: ஸுஹைப் இப்னு ஸினான் அர்ரூமி(ரலி), முஸ்லிம் 5735

## ஒருவரின் தீங்கைப் பயந்தவர் கூற வேண்டியது

اَللّٰهُمَّ اكْفِنَاهُ بِمَا شِئْتَ

அல்லாஹும்மக்பி(ف)னாஹு பிமா ஷி(ش)ஃத

யா அல்லாஹ்! நீ நாடியதைக் கொண்டு அவருக்கெதிராக எமக்குப் போதுமானவனாக இருப்பாயாக!

அறிவிப்பவர்: அபூபக்கர் ஸித்தீக்(ரலி), அஹ்மத் 1/181

# எதிரிகளின் தீங்குகளிலிருந்து பாதுகாப்பு பெற ஓத வேண்டிய துஆக்கள்

5

## ஒரு கூட்டத்தாரைப் பயந்தவர் கூற வேண்டியது

اَللّٰهُمَّ إِنَّا نَجْعَلُكَ فِيْ
نُحُوْرِهِمْ وَنَعُوْذُبِكَ مِنْ شُرُوْرِهِمْ

அல்லாஹும்ம இன்னா நஜ்அலுக பீ(ف)
நுஹூரிஹிம் வநஊது பிக மின் ஷுரூரிஹிம்

யா அல்லாஹ் நிச்சயமாக நாம் அவர்களுடைய (எதிரிகள்) தொண்டைக் குழிகளில் உன்னை ஆக்குகிறோம். அவர்களுடைய தீமைகளிலிருந்தும் உன்னைக் கொண்டு நாங்கள் காவல் தேடுகிறோம்.

அறிவிப்பவர்: அபூ மூஸா அல் அஷ்ரிய்(ரலி) அவர்கள், அபூதாவூத் 1537

# எதிரிகளின் தீங்குகளிலிருந்து பாதுகாப்பு பெற ஓத வேண்டிய துஆக்கள்

6

**நபி (ஸல்) அவர்கள் போருக்கு புறப்பட்டால் இவ்வாறு கூறுவார்கள்**

اَللَّهُمَّ أَنْتَ عَضُدِي وَنَصِيرِي بِكَ أَحُولُ وَبِكَ أَصُولُ وَبِكَ أُقَاتِلُ

அல்லாஹும்ம அன்த அளுதீ, வ நஸீ(ص)ரீ, பிக அஹூலு, வ பிக அஸூ(ص)லு, வ பிக உகாதிலு

**யா அல்லாஹ் நீயே எனக்கு பக்க பலம் நீயே என் உதவியாளன் உன்னைக் கொண்டே நான் சுற்றிச் சுழல்கிறேன். உன்னைக் கொண்டே நான் தாக்குதல் தொடுக்கிறேன் உன்னைக் கொண்டே நான் (எதிரிகளுடன்) போரிடுகிறேன்.**

அறிவிப்பவர்: அனஸ் இப்னு மாலிக்(ரலி) அவர்கள், அபூதாவூத் 2632